# யூன் – 03 – திங்கள்

## புனித சாள்ஸ் லுவங்காவும்

## உலகில் உங்களுக்குத் துன்பம் உண்டு, எனினும் துணிவுடன் இருங்கள் (யோவா 16:33)

-----------------------------------------------------------------------

**முதல் வாசகம் : திருத்தூதர் பணி19 : 1 – 8**

அப்பொல்லோ கொரிந்தில் இருந்தபோது பவுல் மலைப்பாங்கான பகுதி வழியாக எபேசு வந்தார். அங்கு அவர் சில சீடர்களைக் கண்டு,அவர்களை நோக்கி, "நீங்கள் நம்பிக்கை கொண்டபோது தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்டீர்களா?" என்று கேட்டார். அதற்கு அவர்கள், "தூய ஆவி என்னும் ஒன்று உண்டு என்று கூட நாங்கள் கேள்விப்பட்டதில்லையே" என்றார்கள்." அவ்வாறெனில் நீங்கள் எந்தத் திருமுழுக்கைப் பெற்றீர்கள்?" எனப் பவுல் கேட்க, அவர்கள், "நாங்கள் யோவான் கொடுத்த திருமுழுக்கைப் பெற்றோம்" என்றார்கள்.அப்பொழுது பவுல், "யோவான் மனம் மாறிய மக்களுக்குத் திருமுழுக்குக் கொடுத்து, தமக்குப் பின் வரும் இயேசுவிடம் நம்பிக்கை கொள்ளுமாறு கூறினார்" என்றார்.இதைக் கேட்ட மக்கள் ஆண்டவராகிய இயேசுவின் பெயரில் திருமுழுக்குப் பெற்றனர்.பவுல் அவர்கள் மீது கைகளை வைத்ததும், தூய ஆவி அவர்கள் மேல் இறங்கியது. அப்பொழுது அவர்கள் பரவசப்பேச்சு பேசினர் இறைவாக்கும் உரைத்தனர்.அங்கு ஏறக்குறைய பன்னிரண்டு பேர் இருந்தனர்.பின்பு பவுல் தொழுகைக்கூடம் சென்றார். அங்கு அவர் மூன்று மாதங்கள் இறையாட்சிபற்றித் துணிவுடன் மக்களோடு பேசி அவர்களோடு விவாதித்து அவர்களை நம்பச் செய்தார்.

**பதில்பாடல் :** உலகிலுள்ள அரசர்களே! கடவுளைப் புகழ்ந்தேத்துங்கள்

**நற்செய்தி : யோவான்16 : 29 - 33**

அக்காலத்தில் இயேசுவின் சீடர்கள், "இப்போதுதான் உருவகம் எதுவுமின்றி வெளிப்படையாகப் பேசுகிறீர். உமக்கு அனைத்தும் தெரியும். யாரும் உம்மிடம் கேள்வி கேட்கத் தேவையில்லை என்பது எங்களுக்கு இப்போது புரிகிறது. இதிலிருந்து நீர் கடவுளிடமிருந்து வந்தவர் என்பதை நம்புகிறோம்" என்றார்கள்.' இயேசு அவர்களைப் பார்த்து, "இப்போது நம்புகிறீர்களா? இதோ! காலம் வருகிறது. ஏன், வந்தேவிட்டது. அப்போது நீங்கள் சிதறடிக்கப்பட்டு ஒவ்வொருவரும் அவரவர் வீட்டுக்கு ஓடிப்போவீர்கள் என்னைத் தனியே விட்டு விடுவீர்கள். ஆயினும் நான் தனியாய் இருப்பதில்லை. தந்தை என்னோடு இருக்கிறார். என் வழியாய் நீங்கள் அமைதி காணும் பொருட்டே நான் இவற்றை உங்களிடம் சொன்னேன். உலகில் உங்களுக்குத் துன்பம் உண்டு, எனினும் துணிவுடன் இருங்கள். நான் உலகின்மீது வெற்றி கொண்டுவிட்டேன்" என்றார்.

**தியானம்:** இன்று உலகில் பல்வேறு வகையான துன்பங்களால் மக்கள் அவஸ்த்தைப் படுகின்றார்கள். நோயின் தாக்கம், எதிர்காலத்தைப் பற்றிய கலக்கம், பிள்ளைகளின் வாழ்வைப்பற்றிய ஏக்கம் என்று பலவகையான மனப் போராட்டங்களின் மத்தியில் இன்றைய நற்செய்தியில் யேசு கூறும் வார்த்தைகள் எம்மை ஆறுதல் படுத்துகின்றனவா? அண்மையில் எமது தாயகத்தில் யேசுவின் உயிர்ப்பு விழாவில் பங்குபற்றிய மக்கள் பலர் அநியாயமாக கொல்லப் பட்டார்கள். ஆலயத்தில் கூடி இருந்தவர்கள் கொல்லப்பட்டது எல்லாவகையான மக்களுக்கும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. ஏன் இவை நடந்தன என்பதுதான் எல்லோரின் கேள்வியாகவும் இருக்கின்றது. அதுவும் ஒன்றுமே அறியாத சின்ன மொட்டுக்கள் பலியாகியிருப்பது பலரின் கண்களை குளமாக்கியது. அவர்கள் பாவம் செய்தவர்களா? இல்லவே இல்லை. அவர்களின் ரத்தம் எமக்கு ஒரு செய்தியை சொல்லி நிற்கின்றது. மனம் மாறுங்கள். பாவமே அறியாத யேசு ரத்தம் சிந்தி எம்மை மீட்டார். ஆனால் நாம் அதற்கு ஈடாக எதனை செய்கின்றோம்? இன்று இத்தனை உயிர்கள் ஆலயத்தில் ரத்தம் சிந்தி இருக்கின்றன. அவர்களின் இந்த விலைக்கு நாம் என்ன கைமாறு செய்யப் போகின்றோம்? இறந்த அவர்களை விட வாழும் நாம் பாவம் செய்தவர்களாக இருக்கின்றோம். இவற்றைப்பார்த்து மனம் மாற்றம் பெற எமக்கு அழைப்பு தரப்பட்டுள்ளது. எது எப்போது எங்கே நிகழும் என்று யாருக்கும் தெரியாது. எனவே நாம் எம்மை தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும் என்ற செய்தியை இச்சம்பவம் எமக்கு சொல்லி நிற்கின்றது. எமது நம்பிக்கையை ஆட்டம் காண செய்தும் இருக்கின்றது. இழப்பை சந்தித்த மக்களால் எவ்வாறு மீண்டும் ஆலயம் நோக்கி செல்ல முடியும்? அங்கு செல்லும்போது நடந்த சம்பவம் நினைவில் வந்து அவர்களுக்கு மனப் பாதிப்புக்களை ஏற்படுத்தக் கூடும். ஆனால் யேசுவின் வார்த்தை எமக்கு ஆறுதலக இருக்கின்றது. உலகில் உங்களுக்குத் துன்பம் உண்டு, எனினும் துணிவுடன் இருங்கள் என்பதுதான் அது. முதல் வாசகத்தில் பார்ப்பதுபோல் பல துன்பங்களை மக்களுக்கு கொடுத்த பவுல் மனம் மாற்றம் பெற்று யேசுவைப் பற்றி துணிவுடன் அறிவித்ததுபோல், இவ்வாறான கடின இதயம் கொண்ட மனிதர்களின் மன மாற்றத்திற்காக நாம் மன்றாடுவோம். மனம் தளராமல் துணிவுடன் நாமும் எம் பயணத்தை தொடர்வோம்